DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.125/2025

DW - 2

| | | |
|---|---|---|
| Name | : | பொம்முலு |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

முதல் விசாரணை **Date : 14.07.2026**

சுகண்யா எனது பக்கத்து ஊரை சார்ந்தவர். எனது அண்ணன் மகன் சேகரும் சுகண்யாவும் 4 – 5 வருடங்களாக காதலித்தாக கூறியதன் பேரில் 2024ம் வருடம் ஜனவரி - பிப்ரவரி மாதத்தில் நானும் மற்ற உறவினர்களும் சேகருடன் சேர்ந்து சுகண்யாவின் வீட்டிற்கு பெண் கேட்டு சென்றோம். அப்போது சுகண்யாவின் பெற்றோர் சேகருக்கு நல்ல வேலைகிடைக்கட்டும் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என சொல்லி அனுப்பிவிட்டார்கள். பிறகு சுமார் 6 மாதங்கள் கழித்து பிரச்சனை ஏற்பட்டதாக சொல்லி சுகண்யா சேகர் மீது வழக்கு கொடுத்ததாக தெரிந்துகொண்டேன்.

அதனால் நாங்கள் ஊர் பெரியவர்களுடன் சுகண்யா வீட்டிற்கு சென்று அது பற்றி கேட்டபோது சுகண்யா சேகர் தொந்தரவு செய்ததாகவும் சுகண்யாவின் சொந்தகாரர்கள் வழக்கறிஞராக இருப்பதால் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கலாம் என சொன்னதன் பேரில் சுகண்யா காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், அதனை தான் வாபஸ் வாங்கி கொள்வதாகவும் சிறிது காலம் கழித்து சேகர் நல்ல வேலைக்கு சென்றவுடன் திருமண பேச்சுகளை தொடரலாம் எனவும் சொன்னார். அதனால் நாங்கள் வந்துவிட்டோம்.

பின்பு 4 மாதங்கள் கழித்து சுகண்யா மீண்டும் சேகர் மீது காவல்நிலையத்தில்

புகார் கொடுத்ததாக கேள்விபட்டேன். பின்னர் சுகண்யாவிற்கு வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்த்து திருமணம் செய்து வைத்ததால் நாங்கள் அவர்களை மீண்டும் தொடர்பு கொள்ளவில்லை.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனது அண்ணன் மகன் சேகர் சுகண்யாவின் வங்கிக்கு சென்று சுகண்யாவை சேகரை திருமணம் செய்துகொள்ளுமாறு தொடர்ந்து தொந்தரவு செய்து வந்தார் என்றும், அவர் சேகருடன் பேச விருப்பம் இல்லை என தெரிவித்ததற்கு பின்னிட்டும் தொடர்ச்சியாக மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டார் எனவும் கடந்த 04.10.2024ம் தேதி சேகர் சுகண்யா வேலை பார்க்கும் வங்கிக்கு சென்று அவரது கேபினுக்குள் அத்துமீறி உள்ளே நுழைந்து அவரை தொந்தரவு செய்து அவருக்கு பாதுகாப்பு இன்மையை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் பொய் என்றாலும், நான் எதிரி சேகர் எனது அண்ணன் மகன் என்பதால் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**